# திருக்குறள்
# ஆய்வுக் கட்டுரைகள்

## தொகுப்பு-II



வெளியீடு :

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**
**2021**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் |
| தொகுப்பாசிரியர்கள் | : | தகைசார் வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ்,<br>முனைவர் ச. மனோன்மணி |
| பதிப்பு | : | 2021 |
| பக்கங்கள் | : | xiv + 182 |
| பிரதிகள் | : | 400 |
| வெளியீடு | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| அச்சுப்பதிப்பு | : | எவகிறீன் அச்சகம், பிறைவேட் (லிமிட்டெட்)<br>இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே. 021 221 9893 |
| ISBN | : | 978-624-5911-12-7 |

| | | |
|---|---|---|
| Title | : | Tirukkural Ayvuk Katturaikal<br>(Tirukkural Research Papers) |
| Compiler | : | Emeritus Prof. A. Sanmugadas,<br>Dr.S. Manonmani |
| Edition | : | 2021 |
| Pages | : | xiv + 182 |
| Copies | : | 400 |
| Published by | : | Dept of Cultural affairs,<br>Ministry of Education,<br>Cultural affairs, Sports and Youth affairs,<br>Northern Province. |
| Printed at: | | Evergreen Printers,<br>693, K.K.K. Road, Jaffna.<br>Tel. 021 221 9893 |
| ISBN | : | 978-624-5911-12-7 |

**திரு.சி. ரமணராஜா,**
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# திருக்குறளில் காலக்கணிப்பு

**ஆய்வுச்சுருக்கம்:**

*காலம் பற்றிய கருத்தியல் வெளிப்பாடானது மக்களது வாழ்வியல் நடைமுறை பற்றியதும் தத்துவவியல்பு உடையதுமாகும். காலக் கணக் கீடுகளுடன் இணைந்தே காலந்தோறும் தமிழர்களின் வாழ்வியல் வழக் காறுகள் மற்றும் நம்பிக்கைகள் வளம் பெற்று வந்தன. தமிழர்களின் பண் பாட்டுத் தொன்மை மற்றும் அறிவுப்புலங்களின் ஊற்றுக்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரியும் சான்றுகளுள் இலக்கி யங்களுக்குத் தனித்த சிறப்புண்டு. இந்தவகையில், பண்டைய தமிழரின் வாழ்வியலுடன் பிரிக்க முடியாதபடி ஒன்றித்து விட்ட காலக்கணிப்புச் சார்ந்த கருத்தமைவுகள் பற்றிய அறிதலுக்கும் இலக்கியச் சான்றுகளே துணையாக அமைகின்றன. காலம் என்பது மனித வாழ்வியலைக் கட்டுப் படுத்துவதாக விளங்குவது. இத்தகைய காலதத்துவத்தின் கணிப்புகள் பற் றிய கருத்தியல்களைத் தமிழரின் பொதுமை நோக்குச் சிந்தனைகளுக்குத் தக்க சான்றாக அமைகின்ற திருக்குறளில் வைத்து நோக்குவதாக இக்கட் டுரை அமைகிறது. இதனடிப்படையில், காலம் பற்றிய சிந்தனைகள், காலத்தினை அளந்தறியும் முறை, அதன் பெறுமானம், குறித்த*

*அக்காலங்களில் செய்ய வேண்டியன, காலத்தின் பயன்படுநிலை மற்றும் முக்கியத்துவம் என்பன குறித்த கருத்தியல்களை இனங்கண்டு வெளிப் படுத்துவதற்கு இக்கட்டுரை எத்தனம் செய்கிறது.*

## அறிமுகம்

இருபத்தொராம் நூற்றாண்டின் இருதசாப்த காலம்வரை மக்களின் வாழ்வியலுக்குள்ளும் சிந்தனைப் பாய்ச்சலுக்குள்ளும் சுதேசியம் கடந்து உலகமயமாக்கல் தளத்திலும் விரிவடைந்து உலகப் பொதுமறை என்ற அந்தஸ்துடன் தனித்துவ இடத்தைப் பெற்றிருக்கும் நூல் திருக்குறள் ஆகும். தமிழர் மரபின் அறிவார்ந்த சிந்தனைப் பாய்ச்சலின் வேர்களை அதிகம் இந்நூலில் கண்டு கொள்ள முடிகிறது. புராதன சமூகம் ஒன்றுக் கான அறம், ஒழுங்கு, இன்பம், பொருள் என்ற பெயரில் மக்களிடம் வலியுறுத்தப்பட்ட நியதிகளின் உருவாக்கத்தில் நீதி இலக்கியங்களின் வகிபங்கு தனித்துவமானது. புராதன காலம் தொட்டு தமிழர் வாழ் வியலில் செல்வாக்குச் செலுத்தி வரும் நீதி இலக்கியங்களில் இந்நூல் தனித்துவ அடையாளத்தைப் பெற்றிருக்கின்றது.

புராதன இனக்குழுமச் சமுதாயம் ஒன்றினது வாழ்வியல் கட்டமைப் புக்கள் சிதிலமடைந்து, சமயங்களின் ஆதிக்கம் மேலாண்மை பெற முனைந்த காலத்தில் மனித வாழ்வியலை மீண்டும் வலுப்படுத்தி நெறிப்படுத்தும் நுண் அரசியல் போக்குகளும் வலுவடைந்திருந்தன. சமூக மாற்றத்துக்கான சிந்தனைத் தளங்கள் உருவாகின. சிதிலமடைந்த புராதன சமூகத்தை மீளக் கட்டமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. மக்களின் இன நலனோம்பும் அடிப்படைச் சிந்தனைகளின்வழி விதிகள், விலக்குகள் உருவாக்கப்பட்டன. அவை நீதி இலக்கியங்களாக - அற இலக்கியங்களாக - மக்களை நெறிப்படுத்தவல்ல வழிகாட்டல் இலக்கியங் களாக உருவாகி பிற்கால இலக்கிய மரபின் செழுமையை விரிநிலை பெறச்செய்தன. சங்கமருவிய காலத்தில் எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவ்வகையில் சுட்டுணர்த்தற்குரியன. இத்தொகுப்பிலுள்ள நூல்களுள் திருக்குறளும் ஒன்று.

பழந்தமிழர்களின் நம்பிக்கைகள் சார்ந்தும், சமய வாழ்வியல் மற்றும் பொது வாழ்வியல் சார்ந்தும் காலக் கணக்கீடுகள் வழக்கத்தில்

நிலவி வந்துள்ளன. அறத்தினை அடிப்படையாகக் கொண்ட வாழ்விய லில் காலக்கணிப்பு பிரிக்க முடியாதபடி ஒன்றித்திருந்தன. வாழும் நாட்கள் அர்த்தமுள்ளதாக அமையும் வண்ணம் சான்றோர், மக்கள் பின்பற்ற வேண்டிய உயரிய வாழ்வியலுக்கான ஒழுக்கங்களை வரையறுத்துக் கூறினர். இவற்றைப் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் பார்க்கக் காண லாம். இன்ன காலத்தில் இன்னின்னவை செய்யத்தக்கன. செய்யத் தகாதன எனப் பேதப்படுத்தி வாழ்வியலைச் செம்மைப்படுத்துவனவாக அத்த கைய அறிவுரைகள் காணப்படுகின்றன. அனைத்திற்கும் காலமே மூல மாகும். இயற்கையில் நிகழும் விகற்பமெல்லாம் காலத்தினாலேயே நிகழ் கின்றன. இவ்வாறு சகலமும் 'சர்வஸ்ய காரணாங்கால' என்கிற காலப் பிர மாண வாதத்தின்படி காலமே படிப்படியாய் பலவாறாகப் பேதித்து நிற்கிறது.

காலம் என்பதனைக் கட்டுப்படுத்தவோ நிறுத்தி விடவோ முடியாது. 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள், 'பருவத்தே பயிர் செய், 'கட்டிய வீட் டுக்கு மேஸ்திரி தேவையில்லை, 'போன பஸ்ஸிற்குக் கை காட்டாதே' முத லான பழமொழிகள் காலத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவன.

பழந்தமிழர் வாழ்வியலானது இன்பம், பொருள், அறம் என்ற அடிப் படையில் வாழ்க்கைப் போக்கினைக் கொண்டிருந்தது. இந்த ஒழுங் கினை அறம், பொருள், இன்பம் என வரிசைக் கிரமமாக்கிய சிறப்பு திருக் குறளுக்கேயுண்டு. இந்த ஒழுங்கமைப்பு திருவள்ளுவரின் சமூக நலனோம்பும் தூர தரிஷன நிகழ்ச்சித் திட்டமே எனலாம். மேற்படி ஒழுங்கமைப்பினூடாக மக்கள் எவ்வாறு வாழ வேண்டும்? எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்? விலக்கப்பட வேண்டியன எவை? வாழும் நாட் களின் பெறுமதி யாது? என்பது தொடர்பாக ஒன்றே முக்கால் அடியில், ஏழு சீர் அமைப்பில், ஏழு சொற்களில் கூறியிருப்பதானது தமிழர் சிந்தனைத் திறன் வெளிப்பாட்டிற்கு நல்லதொரு திருட்டாந்தமே. 'மாந்தரின் வாழும் காலம்' என்ற இடைவெளிக்குள் நின்றே வள்ளுவரின் காலக்கணிப்புச் சார்பான சிந்தனைகளை நுணுகி நோக்குதல் வேண்டும். அதாவது, அறம், பொருள், இன்பம் எனும் திரிபதார்த்த ஒழுங்கினை மையப்படுத்தி வாழ்வியலைக் கட்டமைக்க எத்தனித்தமையின் அடிப்படையில் காலக் கணிப்பீட்டினை அணுகலாம். காலக் கணிப்பீட்டில் அளவைகள் தொடர்பான அறிவினைப் பெறுவதும் தவிர்க்கவியலாதது. இதன்வழி,

- அளவைகள் மற்றும் காலக்கணிப்புகள்
- மனித வாழ்வியலில் காலத்தின் பெறுமானமும் அதனையுணர்ந்து செய்ய வேண்டியனவும் எனும் வகையில் வள்ளுவரின் காலக் கணிப்புத் தொடர்பாக நோக்குவது சிறப்பாகும்.

## அளவைகள் மற்றும் காலக்கணிப்புகள்

### அளவைகள்

அளவைகள் எனப்படுவன ஒன்றினை அளவிடுவதற்கான - கணிப்பதற்கான - தரவு அல்லது முடிவுகளைப் பெறுவதற்கான கருவிக ளாக அமையவல்லவை. அளவைகளை நுண்பொருள் அளவை (உணர்வு) என்றும், பருப்பொருள் அளவை (கருவி) என்றும் இரண் டாகப் பகுக்கலாம் எனக் கூறும் பகவதி, நுண்பொருள் அளவையைக் கருதல், காட்சி, ஆகமம் என முந்நிலைகளாகப் பகுக்கலாம் என்றும், கருவிகள் கொண்டு அளக்கப்படுவன பருப்பொருள் அளவை என்றும் குறிப்பிடுகின்றார். (பகவதி,கு.,2003,ப.1) நுண்பொருள் அளவைக ளானவை மெய்யியற்றளத்தில் முப்பொருள் சார்ந்த சிந்தனைகள் பற்றி அறிவாராய்ச்சியியலின் அடிப்படையில் முடிவுகளைப் பெறுவதற்கான வழிகளாக உள்ளன. தத்துவவாதிகளின் வாதங்களுக்கு ஏற்ப அவை எடுத்தாளப்படுவதுண்டு. ஆயினும் பத்து அளவைகள் (பிரமாணங்கள்) இவ்வகையில் எடுத்தாளப்படினும் அவற்றைக் காட்சி, கருதல், உரை எனும் முப்பிரமாணங்களுக்குள் உட்படுத்தி நோக்குவது சைவசித்தாந்த மரபாக உள்ளது. இக்கட்டுரையானது பருப்பொருள் அளவைகள் பற்றி நோக்குவதாகவே அமைகின்றன. பண்டைய தமிழர்கள் பருப்பொருள் அளவைகளைக் கொண்டு அளந்து தம் வாழ்வினைச் சிறப்புச் செய்தனர். எண்ணலளவை, நீட்டலளவை, முகத்தலளவை, நிறுத்தலளவை என்பன பொதுவான அளவை முறைகளாகக் காணப்படுகின்றன.

கருவிகளால் அளக்கப்படக்கூடிய அளவைகளாக எண்ணல், முகத்தல், நிறுத்தல், நீட்டல், தெறித்தல் என்ற அளவைகளை நாம் காண்கிறோம். அளவைகள் இவண் ஐந்தாக இருப்பினும் ஏழு என்றல் பெரும்பா லோர் கருத்து. சா.கணேசன் அளவைகள் ஏழு எனக் குறிப்பிட்டு, அவை எண்ணல், முகத்தல், நிறுத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல்,

சார்த்தல் எனப்பிரிப்பார். நன்னூல் உரையாசிரியரும் இவ்வாறே ஏழு அளவைகளாகப் பகர்கின்றார். (மேலது,5) முகத்தல், பெய்தல் அளவை களை நாம் ஒன்றாகவே எண்ணலாம். ஏனெனில் பெய்தலை முகத்தல் அளவையினுள்ளே அடக்கி விடலாம். இன்று ஒரே அளவையினை இரண்டுக்கும் பயன்படுத்தும் தன்மை இவற்றின் தொடர்பினைக் காட்டும். மனிதன் தனது உடலினைக் கொண்டுதான் இத்தகைய அளவுகளைக் கணிப்பிட்டான். எண்ணலளவைக்கு விரல்களும், நீட்டலளவைக்கு கை மற்றும் கால்களும், முகத்தல், நிறுத்தலளவைகளுக்கு கைகளையும் பயன்படுத்தினான். தனது நிழலின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு நேரத்தினைக் கணிப்பிட்டான்.

மனிதனுக்கு அளவைகளின் தேவை இன்றியமையாதனவாகின் றன. அவனது வாழ்வியலில் முழுதளாவிய கூறுகளிலும் அளவைகள் பிரிக்க முடியாத வகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. நடத்தைகள் உள்ளிட்ட மனிதப் பண்பியல்புகள் யாவும் அவரது பண்பாட்டினை அள விடும் கருவிகளாகின்றன. திருக்குறள் ஒழிபியலில் வரும் குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாணு டைமை, குடிசெயல் வகை, உழவு, நல்குரவு எனும் அதிகாரங்களில் கூறப்பட்ட நடத்தைசார் கருத்துக்கள் யாவும் ஒருவரது பண்பாட்டினை மதிப்பீடு செய்வதற்குத் துணை புரிகின்றன. சான்றாக, 'குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல்' (குறள்,959), 'குடிப்பிறந்தார் குன்றுவ செய்த லிலர்' (குறள்,954), 'உயிர் நீப்பின் மானம் வரின்' (குறள்,969), 'நஞ்சுண்ட மைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' (குறள்,580), 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' ,(குறள்,997), 'அந்தணர் என்போர் அறவோர்' (குறள்,30), நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்' (குறள்,28), 'அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறிவிடும்' (குறள்,980), 'பணியுமாம் என்றும் பெருமை' (குறள், 978), எனுங் கருத்துக்களைச் சுட்டலாம்.

**காலம்:**

பண்டைத் தமிழரின் காலக்கணக்கீடுகள் பற்றிய அறிதலுக்கு இலக்கியச் சான்றுகளே மூலம். வானில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு பண்டைத் தமிழர் காலத்தைக் கணக்கிட்டனரென இலக்கியக்

குறிப்புக்களின் வழி அறியலாம். தமிழ்நாட்டில் வானியலிலும், சோதிடத் திலும் வல்ல அறிஞர் அறிவர், கணி, கணியன் என அழைக்கப்பட்டனர். கணியன் பூங்குன்றன், பக்குடுக்கை நன்கணியார், கணிமேதாவியார் என்போர் புலவர்களாக விளங்கியுள்ளனர். அரசனுடைய அவையில் பெருங்கணிகள் இருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. நாழிகை வட்டில் கொண்டு காலத்தைக் கணிப்போர் நாழிகைக் கணக்கராவர். 'மூவகைக் காலமும் நெறியினாற்றும் அறிவர்' களைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். (தெட்சணா மூர்த்தி,அ.,2011,167)

காலம் என்பது தக்க சமயம், பொழுது, பருவம் எனப்பொருள்படும். (தமிழ் ஆங்கில அகராதி, 319) நொடி, நிமிடம், மணி, நாள், மாதம், வருடம், முதலிய அளவுகளால் குறிக்கப்படுவதும் பிரபஞ்சம் தோன்றிய திலிருந்து இடைவிடாமல் தொடர்வதுமான ஒன்று எனவும் பொருளு ரைப்பர். (வாழ்வியற் களஞ்சியம்,IV,298) Tamil lexicon காலம் என்ப தற்குப் பொழுது, தக்க சமயம், பருவம், பருவப்பயிர், காலை, விடியல், மரண காலம், காலதத்துவம், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என தொழி நிகழ்ச்சியைக் குறிக்கும் முக்காலம், விளம்பம், துரிதம், மத்திமம் எனும் இசைக்குரிய திரிகாலம், கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், லகு, குரு, புலுதம், காகபதம் எனப் பலவாறு விளக்கம் தருகின்றது. (Tamil Lexicon.,1982, 895) திரிகால வர்த்தமானம் அறிதலே காலமறிதலாகும். (மதுரைத் தமிழ்ப் பேரகராதி, 1956, 608)

காலம் பற்றிய கருத்தமைவுகள் மக்கள் வாழ்வியலில் நடைமுறை பற்றியதாகவும், தத்துவார்த்த இயல்புடையதுமாக விளங்குகின்றன. காலதத்துவம், என்றுமே உள்ள ஒன்றாகும். அது தொடக்கமும் முடிவும் இல்லாமல் இடையறாத இயங்கு நிலையுடையது. ஆதலால், இறைவ னையே காலதத்துவம் என்று சுட்டுணர்த்தும் மரபும் நிலவி வந்தி ருக்கிறது.

*"ஞாலமே விசும்பே இவை வந்துபோம்*
*காலமே! உனை என்று கொல் காண்பதே"*

என்கிறார் மணிவாசகர். (திருவாசகம், திருச்சதகம். 43) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்களாகும். மேற்படி பாடலில், இடை

யிலுள்ள நீர், தீ, காற்று என்பனவற்றை விடுத்து தொடக்கம் (பூமி) மற்றும் முடிவினை (விசும்பு) குறிப்பிட்டதனால், அவை யாவற்றையும் சேர்த்து ஐந்து பூதங்களும் தோன்றி மறைதலை காலதத்துவம் என்று கூறப்படு கிறது. சிவஞான சித்தியாரும், "நித்த மென்றுரைப்பர் காலநீங்கிய நிலைமையே..." (சிவஞானசித்தியார்,பா.எ.66) என்றுரைக்கின்றது.

கண்ணுக்குத் தெரியாத சக்கரம் போன்றதே காலதத்துவமாகையால் இதனை காலத்திகிரி என்பர். இதுவே வைணவ தத்துவத்தின் அசித்து என்பதன் ஒரு பகுதியான காலதத்துவம். இது சத்துவ சூனியம் எனவும் வழங்கப் பெறும். சக்தி தத்துவம் காலத்தையும் நியதியையும் வரைய றுக்கும். ஆன்மா போகத்தை நுகரும் போது, போகத்தை காலவரை யறையுட்படுத்துவது காலம் என்னும் தத்துவம். காலம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூன்றாகி ஆன்மாவுக்கு கன்மத்தைக் கூட்டி நிற்கும். அது உயிர்களின் வினைப்பயனை முற்றுப் பெறுவித்தல், நிகழ்த்துவித்தல், தோற்றுவித்தல் என்பவற்றைச் செய்யும். காலம் சுகதுக்க போகங்களை அனுபவிக்க வேண்டிய கால வரையறையைச் செய்து கொண்டிருக்கும். (இளையதம்பி, மு.,1986,49). காலம், நியதி, தத்துவம், கலை, அராகம், வித்தை எனும் தத்துவங்களினால் ஆன்மா கட்டுப்பட்டுச் செயற்படும். உயிரை நுகர்ச்சியின்பால் ஈர்த்துக் கொள்வனவாக இவை காணப்படு கின்றன. வித்தியா தத்துவங்கள் ஏழினுள் புருடன், மாயை தவிர்ந்த ஏனைய இவ்வைந்தும் ஆன்மாவுடன் கஞ்சுகம் (சட்டை) போல ஒட்டி நிற்பதனால் இவற்றைப் 'பஞ்சகஞ்சுகம்' எனவும் சுட்டுவர்.

இதுவரை நோக்கிய கருத்துக்களில் இருந்து காலம் என்பதனை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைக் காலங்களாகப் பகுத்துக் காண்பது பெறப்படும்.

*"காலம் தாமே மூன்றென மொழிய*
*இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா*
*அம்முக்காலமும்"* (சொல். 6:2-3)

என்பர் தொல்காப்பியர். இதனால் இத்தகைய திரிகாலப்பாகுபாடு தொல் காப்பியர் காலத்துக்கு முன்னரும் இருந்திருக்கிறது என்பதனை அறிந்து ணரலாம்.

*"நாளென ஒன்று போற்காட்டி யுயிரீரும்*
*வாளதுணர்வார்ப் பெறின்" (குறள், 334)*

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை யுடைத்திவ் வுலகு" (குறள், 336)*

*"ஒருபொழுதும் வாழ்வது அறியார்" (குறள், 337)*

எனுங் கருத்தியல்கள் காலத்தின் சிறப்பினையும் அதனை உணர்ந்திருந்த பண்டைய தமிழரின் மனவோட்டங்களையும் விளக்கவல்லன.

இந்நிலையில் பலவற்றையும் அளந்து நெறிப்படுத்திய பழந்தமிழர் காலத்தையும் அளந்து கணக்கிட்டனர். காலமாற்றங்கள் தட்ப வெட்ப நிலைக்கேற்ப அமைதல், இயற்கைச் சூழல்கள், வானத்தில் காணப்படும் விண்மீன்கள் பற்றிய அறிவு காலம் கணித்தலுக்கு அவர்களுக்கு உதவின. இன்று போன்று அறிவியலில் வளர்ச்சி அன்று இல்லை. எனினும் தம் நுண்மாணுழை புலமே கருவியாகக் கொண்டு அனைத்தையும் நுண்மையாக நோக்கிய நிலையை அவர்களின் காலம் பற்றிய எண்ணங்கள் உணர்த்தி நிற்கின்றன. (கு.பகவதி,2003,77) காலத்தின் நெடுமையை மட்டுமன்றி குறுமையையும் அளந்தனர். பகலில் வெயிலை வைத்து நாட்களைக் கணக்கிட்டது போன்று இரவில் விண்மீன்களைக் கொண்டு நேரத்தையும், வீசும் காற்றின் அளவு மற்றும் திசையை அடிப்படையாகக் கொண்டு மழையின் தன்மையினையும் கணித்தனர்.

காலமானது மாத்திரை, கணம், விநாடி, வாரம், மாதம், பக்ஷம், இருது, அயனம், வருஷம், நாழிகை, நாள், திங்கள், முழுத்தம் (முகூர்த்தம்) சிறுபொழுது, பெரும்பொழுது, ஊழி, யுகம், கற்பம், யாண்டு முதலானவைகளாய் பேதித்து நிற்கிறது. மாத்திரை என்பது குறுகிய காலத்தைக் குறிக்கும் அளவையாகும். கண்ணை இமைப்பதற்கும், கையை நொடிப்பதற்கும் ஆகும் கால அளவே மாத்திரையின் அளவாகும். காமத்துப்பாலில் வரும், 'இமைப்பிற் கரப்பாக் கறிவலனைத்திற்கே' (குறள்,1129) எனும் குறட்பாவில் மாத்திரையின் அளவு புலப்படுவதனைக் காணலாம். தோழி இயற்பட மொழிந்த வகையில் கூறுவதாக

அமையும் இக்கருத்தில், 'இமைத்தல்' என்பதனால் மாத்திரை அளவே குறிக்கப்பட்டிருக்கிறது. கண்ணை மூடினால் என் காதலர் கண்ணிலிருந்தும் மறைந்து விடுவாரோ என்று கருதி கண்ணை இமைப்பது கூடச்செய்யாமல் இருக்கும் செயலினை விளக்குவதாகவே மேற்படி குறட்கருத்து அமைகிறது.

ஆயினும், குறித்த அந்தக் கணப்பொழுது கூட கண் மூடாமல் இருத்தல் என்பது இதன் வழி எடுத்துக் கூறப்பட்டு இருப்பதனால் மாத்திரையளவையே அச்சொல் உணர்த்தி நிற்கின்றதெனத் தெளியலாம். 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்' என்று கூறும் மணிவாசகரின் சிவபுராணக் கருத்தும் ஈண்டு நினைத்தற்குரியதாகும்.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காலக்குறுமையினை அளவிட நொடி, கணம் எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாத்திரை என்பதே நொடி, கணம் என வழங்கப்பட்டிருக்கிறது.

*"குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயும் காத்தலரிது"* (குறள்,29)

எனும் குறட்பாவில் வரும் கணம் என்பது காலத்தின் மிகக்குறுகிய அளவினைச் சுட்டி நிற்கிறது. ஓரை, முழுத்தம் (முகூர்த்தம்), துடி, பனை, கலை என்கின்ற அளவுகளும் சிறிய அளவுகளாகும். (கு.பகவதி,2003,81-83)

தொல்காப்பியர் 'பனை' என்னும் முகத்தலளவையைச் சுட்டுகின்றார். (தொகை 170) இதற்கு உரையெழுதும் கணேசையர், பனை என்பதனையும் கால அளவு எனக் குறிப்பிடுகின்றார். இதனை ஆ. சிவலிங்கனார் பனைக் குறை..... பனையும் அதன் குறையும் இன்னும் ஒரு பனைப் பொழுது நிற்கிற என்பதனால் பனை அளவுப்பெயராதல் பெறப்படும் - கணேசையர். அவர் கூற்றால் பனை கால அளவு என்பது பெறப்படும் என்று உரைக்கின்றார். (மேலது, 82) இவ்வாறு சொல்லும் நயத்தினால் காலத்தின் நுணுக்கத்தைப் புலவர்கள் பலவாற்றாலும் வெளிப்படுத்தி நிற்பர்.

வள்ளுவரும் பனை, தினை எனும் சொற்களை காலக்குறுமைக்குரியனவாக எடுத்தாண்டிருப்பதனை,

*"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்"* (குறள்,104)

எனும் குறட்பாவினால் நன்கறியலாம். தினை, பனை என்பன காலத்தின் அளவைக் காட்டுவனவாகும். இங்கு பனையளவினைக் காட்டிலும் தினையின் அளவு காலக்குறுமை உடையதாகும். ஒருவர் செய்த உதவியின் பயனை உணர்ந்து கொள்ளும் ஆற்றலுடையவர்கள் தமக்கு ஒருவர் தினையளவு (சிறிய அளவினதான உதவி) உதவி செய்தாலும் அதனைப் பனைத்துணையாக் (பனையளவு) கொள்வர் என்பது இதனாற்றெளியப்படும். மேலும், பிரதியுபகாரம் கருதாது ஒருவர் செய்த உதவியினைச் சீர்தூக்கி நோக்கினால் அப்பெருமை கடலினும் பெரிது எனவும் கூறப்பட்டிருத்தலினால், 'கடலிற்பெரிது' என்பது முகத்தல் அளவையே சுட்டுகின்றது எனலாம்.

தினை, பனை எனும் சொற்களைப் போன்றே 'எள்' என்பதும் காலக் குறுமையினை சுட்டுணர்த்தும். உட்பகையினை விளக்குவதற்காக எள் எனும் சொல்லாட்சி கையாளப்பட்டிருக்கிறது. உட்பகை என்பது எள்ளினைப் போன்று அளவில் மிகச் சிறியதாயினும் கேடு விளைவிக்கக் கூடியதே. இக்கருத்தினை,

*"எட்பகவன்ன சிறுமைத்தே ஆயினும்*
*உட்பகை உள்ளதாங் கேடு"* (குறள்,889)

என விளக்கியுள்ளார். குன்றிமணி, குன்று எனும் சொல்லாட்சிகளும் கால அளவைகளைக் குறிக்கவே கையாளப்பட்டிருக்கின்றன. தினை, பனை, எள், குன்றிமணி, குன்று, மலை, கடல், ஆறு முதலான சொற்கள் யாவும் காலக்குறுமை மற்றும் நெடுமையினை விளக்கும் சொற் பதங்களாகும். அத்துடன் இச்சொற்கள் கனஅளவைக் குறித்து நிற்பதனை யும் அவதானிக்கலாம். நீள அகலத்துடன் உயரத்தையும் பெருக்கினால் கிடைப்பது கனவளவாகும்.இதனடிப்படையில் வள்ளுவரும் சிறிய மற்றும் பெரிய கனவளவுகளைக் எடுத்துக் காட்டுவதற்காகவே மேற்போந்த சொற்களைக் கையாண்டிருக்கின்றார் எனலாம்.

காலத்தினை வரலாற்று நிகழ்ச்சிகள் கொண்டு கணக்கிடும் வழக்கு, காலத்தை அளவிடும் ஒருமுறையாக அமைகிறது. முற்காலத்தில்

கலியப்தம், சகாப்தம் என்றும், இன்று கிறிஸ்தவ சகாப்தம் என்றும் சுட்டும் நிலையினை காண்கின்றோம். கிறிஸ்து பிறப்பதற்கு முன் (கி.மு), கிறிஸ்து பிறந்த பின் (கி.பி) என்பது இன்று நாம் குறிப்பிடும் வழக்கு. வரலாற்று நிகழ்ச்சி காரணமாகப் பெயர் சுட்டுவதனைக் கொல்லம் ஆண்டு பற்றியதொரு கருத்தும் உணர்த்தும். திருவள்ளுவர் ஆண்டு என்று கணக்கிடும் நிலையும் இன்று அமைகிறது. (பகவதி.கு.,2003,79)

இவ்வாறு கணக்கிட்டுக் கூறமுடியாத காலத்தின் மிகுதியை ஊழிக் காலம், யுகம் என சுட்டும் வழக்கம் தமிழரிடையே நிலவி இருக்கிறது. இன்று நடக்கும் காலத்தை கலிகாலம் அல்லது கலியுகம் எனக் கூறுதல் வழக்காகும். 'ஊழி' என்றும் இதனைச் சுட்டுவர். இவ்வாறு சுட்டுணர்த்தும் வழக்கும் பண்டைக்காலம் முதற்கொண்டே நிலவி வந்துள்ளமையை இலக்கிய ஆதாரங்களின் வழி அறியலாம்.

*"நின்நாள் திங்கள் அனைய ஆக: திங்கள்*
*யாண்டு ஓரனைய ஆக, யாண்டே*
*ஊழி அனைய ஆக:* (பதி.90: 51:53)

எண்ணற்ற ஆண்டுகள் இணைந்தது ஊழி என்பது, தமிழரின் கருத்தாக அன்றுமுதல் இன்றுவரை காணப்படுகின்றமையை மேற்போந்த பாடலடியினால் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஊழி எனும் பெருங்கால அளவே இன்று யுகம் என்று குறிப்பிடப்படுகிறது. இதனடிப்படையில் கிரேதயுகம், திரேதாயுகம், துவாபராயுகம், கலியுகம் என நான்கு யுகங்கள் எடுத்தாளப்படுவதுண்டு.

இரு திங்கள் சேர்ந்த காலப்பகுதி பெரும்பொழுது அல்லது பருவம் என்று அழைக்கப்படுகிறது. ஓராண்டினைத் தமிழர் ஆறு பெரும் பொழுதுகளாகப் பகுத்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும்.

*"காரே கூதிர் முன்பனி பின்பனி*
*சீர் இளவேனில் முதுவேனில் என்றாங்கு*
*இருமூன்று வகைய பருவம் அவைதாம்*
*ஆவணி முதலா இரண்டு இரண்டு ஆக*
*மேவின திங்கள் எண்ணினர் கொளலே"*

என்கிறது திவாகரம் தெய்வப்பெயர்த் தொகுதி. நச்சினார்க்கினியார் கருத்துப்படி அன்று ஆவணியில் ஆண்டு தொடங்கிற்று; ஆடியில் முடிந்தது. "காலவுரிமையெய்திய ஞாயிற்றுக்குரிய சிங்கவோரை முதலாகத் தன்மதிக்குரிய கற்கடகவோரையீறாக வந்து முடியும் துணையும் ஓராண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப்படுத்தி இரண்டு திங்கள் ஒரு பருவமாக்கினர்" என்று தம் பொருளதிகார உரையில் கூறுவதனைக் காணலாம். சிங்கவோரையாகிய ஆவணி முதலாகக் கொண்டு கணக்கிடும் முறை கி.மு 500க்கு முற்பட்டது என்றும், சித்திரை முதலாகக் கொண்டு கணக்கிடுவது 2500 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றும் அறிஞர் குறிப்பிடுவர். (தெட்சணாமூர்த்தி, அ.,2011,168)

நான்கு மணி என்கிற அளவுடைய காலம் சிறுபொழுது என்றும், இத தகைய ஆறு சிறுபொழுதுகள் சேர்ந்தது ஒருநாள் என்றும் சுட்டப்படுகின்றது. தமிழர் ஆண்டினை ஆறு பருவங்களாகப் பகுத்தாற் போலவே ஒரு நாளையும் வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என ஆறு சிறுபொழுதுகளாகவும் பகுத்தனர். அறுபது நாழிகைகள் ஒரு நாளெனக் கணித்துள்ளனர். ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்களைக் கொண்டதாகும். தொல்காப்பியத்தில் இச்சிறுபொழுதுகள் குறிக்கப்பட்டிருப்பினும் இதற்கு முன்னரும் இருந்ததாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதன் தொடருறுத் தன்மையினை பிற்கால இலக்கியங்களிலும் காண முடிகின்றது. இவ் ஆறு சிறுபொழுதுகளில் முதல் மூன்றும் பகற்பொழுதுக்கும், பின்னைய மூன்றும் இரவுப்பொழுதுக்கும் உரியன.

திருக்குறளில் காணப்படும் கணம், பகல், காலை, மாலை, நாள், பருவம், பொழுது (போழ்து) எனும் சொல்லாட்சிகள் காலத்தைக் குறிப்பதாகவே அமைகிறது. காலமறிதல், பொழுது கண்டிரங்கல் எனத் தனி அதிகாரங்கள் காலப்பெயரில் அமைந்திருந்தாலும், ஏனைய அதிகாரங்களிலும் காலத்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருப்பதனையும் பார்க்கக் காணலாம்.

காலமறிதல் என்பதில் எந்தக் காலத்தைச் செய்யினும் ஏற்ற பருவ காலத்தை அறிந்து அந்தந்தக் காலத்தில் அவற்றைச் செய்ய வேண்டும்

என வலியுறுத்தப்பட்டுள்ளது. சான்றாக, பகைவர்களை வெல்லுவதற்கு அரசன் அதற்குரிய காலத்தை அறிந்து செயற்பட வேண்டுமென்பதனை, 'வேந்தர்க்கு வேண்டும் பொழுது' (குறள்,48) என்றும், எந்தக் காரியத் துக்கும் அதற்கேற்ற காலம் ஒன்றுண்டு என்பதனை, 'பருவத்தோடு ஒட்ட ஒழுகல்' (குறள்,48) என்றும் குறிப்பிட்டுள்ளமை நல்ல திருட்டாந்தங் களாகும். காலமறிதல் எனும் இவ்வதிகாரத்தில் வரும் பொழுது, காலம், பருவம் எனும் சொல்லாட்சிகள் காலநெடுமையினை உணர்த்தி நிற் கின்றன. பொழுது கண்டிரங்கல் என்பது பொழுதினைக் கண்டு வருத்த முறுதலை உணர்த்துமாதலால் அது சிறுபொழுதினைக் குறித்து நிற் கின்றதெனக் கருதலாம்.இங்கு வரும் பொழுது, பகல், காலை, மாலை, யாமம் எனும் சொல்லாட்சிகள் பொழுதினை அளவிடும் சிறிய மூல அளவைகளாக அமைகின்றன.இந்த அதிகாரத்தில் வரும் குறள் முழுமையும் தனித்திருக்கும் தலைவி மாலைப்பொழுது வந்ததும் தலை வனை நினைந்து வருந்திக்கொள்ளும் இயல்பே விளக்கப்பட்டுள்ளது. இங்கு, காலை, மாலை ஆகிய இருசிறு பொழுதுகள் கூறப்பட்டிருப்பினும் காமத்தின் பொழுதாக மாலைப் பொழுதே கூறப்பட்டுள்ளது. சான்றாக,

*"காலை அரும்பி பகலெல்லாம் போதாக*
*மாலை மலரும் இந் நோய்"* (குறள், 1227)

எனும் குறளைச் சுட்டலாம். மேலுமிங்கு, மாலைப்பொழுதிலேதான் காம நோய் மிகுதிப்படும் எனும் இயற்கை நியதி 'மாலை யுழக்கும் துயர்' (குறள்,1135) எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'மடலூர்தல் யாமத்து முள்ளு வேன்' (குறள்,1136) எனத் தலைவன் கூற்றாக வருங்குறளில் யாமப் பொழுது பற்றியறியலாம். மாலை, யாமம் ஆகியன இரவுப்பொழுது களையே குறிப்பதாகும்.

மேலும், வள்ளுவர், அறம், பொருள், இன்பம் எனும் புருஷ அர்த்தங் களை விளக்குவதற்காகவே அளவைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

*"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"* (குறள்,102)

என்பதில் அளவென்பது சிறிது, பெரிது எனவும் காட்டப்பட்டுள்ளது. ஒருவர் செய்த நன்றி சிறிதாக இருப்பினும் அது ஞாலத்தைக் காட்டிலும்

பெரிதுடையது என்கிறார். 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது' (குறள்,101) என்றும், 'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது' (குறள்,103) என்றும் செய்நன்றி மறவாமையின் பெருஞ்சிறப்பு உரைக்கப்பட்டுள்ளது. நன்றியினை அளவிடுவதற்கு, ஞாலம், வையகம், வானம், கடல் என்பன உவமையாக்கப்பட்டுள்ளன. மேலும், 'ஆற்றின் அளவறிந்து ஈக' (குறள்,477) என்பதனால் பொருளைத் தக்கவர்களுக்கு கொடுக்கும் போது வருவாயின் அளவு அறிந்தே கொடுக்க வேண்டும் எனும் கருத்து விளக்கப்பட்டிருக்கிறது. பரப்பளவு என்பது நீளம், அகலம் என்பவற்றைப் பெருக்கும் போது கிடைக்கும் அளவாகும். சதுர சென்ரிமீட்டர், சதுர அடி என்னும் அளவையால் இன்றைய காலத்தில் பரப்பளவு அளவிடப் படுவதனைக் காண்கிறோம். இங்கு அறம், பொருள், இன்பம் என்னும் முப் பொருட்களைக் கட்டமைத்து அவற்றின் அளவினையறிந்து கூறு வதற்காகவே பரப்பு அலகுகளாக ஞாலம், கடல், வானம், வையகம், ஆறு என்பன உவமையாகக் காட்டப்பட்டுள்ளது எனலாம்.

நீளம், அகலம் மற்றும் உயரங்களை நீட்டியளக்கும் கோலினை அளவு கருவியாகக் கொண்டு அளந்தறிகிறோம். அடி, முழம், யார் என்பன இவற்றை அளப்பதற்கான அலகுகளாகும். தொன்மங்களின் அடிப் படையில் 'ஈரடியால் மூவுலகு அளந்தோன்' என்று விஷ்ணுவைச் சிறப்பிப்பதன் மூலம் மாபலி மற்றும் விஷ்ணு ஆகியோருக்கிடையிலுள்ள மதிப்பீட்டின் வேறுபாட்டினை அறிந்துணரலாம். வள்ளுவர், நட்பாராய்தல் என்னும் அதிகாரத்தில் நட்பினை ஆராய்ந்து கொள்ளாத விடத்து சாகும் காலம் வரை துன்பமுண்டாகும் என்கிறார்.

*"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடை*
*தான் சாந்துயரந் தரும்"* (குறள்,792)

இங்கு 'கடை' என்பதனால் காலத்தின் எல்லை விளக்கப்பட்டிருப் பதனை உணரலாம். பகைவன் நட்புக் கொள்ள வருங்காலத்தில் முகத் தளவில் நண்பனாக நடந்து கொண்டு மனதளவில் அவனை நண்ப னாக நம்பி விடுவதனை விலக்க வேண்டுமென்று (குறள்,830)

குறிப்பிடுவதனால் நட்பாராயும் காலம் (வேளை, சமயம், கணம்) தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே வள்ளுவரும், அளக்க விரும்பிய இடங்களில் 'நீட்டி அளக்கும் கோலை' அளவு கோலாகக் கையாள் கின்றார். குற்றம் நிகழ்ந்து துன்பமேற்படுகின்ற காலங்களில்தான் உண்மையான நண்பர்களை அளந்தறிய முடியும். ஆகவே, ஒருவர், தனது நண்பனின் இயல்புகளை நீட்டியளந்து மதிப்பீடு செய்வதற்கு சிறந்ததோர் அளவுகோல் யாதெனின், 'அந்தத் துன்ப காலமே' ஆகு மெனலாம்.

*"கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை*
*நீட்டி அளப்பதோர் கோல்"* (குறள்,796)

ஆகையால் துன்ப காலத்தில் அளந்து பார்த்து, அந்த சரியான அளவையில் தேறாதவர்களை நண்பராகக் கொள்ளாமல் விடுவதே நலம் பயக்கும் எனும் கருத்து அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

யாதாயினும் ஒன்றினை அளந்தறிவதற்கு அளவு கோலின் நுட்பம் இன்றியமையாதது. ஆதலால், கண்களை நுட்பமான - நுண்ணியமான அளவுகோலாகக் காட்டுகிறார் வள்ளுவர்.

*"நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் காணுங்கால்*
*கண்ணல்லது இல்லை பிற"* (குறள்,710)

என்பதனால் நுட்பமான அளவுகோல் கண்களே என்கிறார். மேலும், அளக்கும் கோலினை 'சீர்தூக்கும் கோல்' எனவும் வள்ளுவர் சுட்டு கின்றார். 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' என்பதனால் எடையின் அளவு காட்டப்பட்டுள்ளமையினை அவதானிக்கலாம். தராசுக்கோல் தன்னள வில் சமமாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் நிறுத்தல் துல்லிய மாக அமையும். 'சான்றோருக்கு அணியென்பது நடுநிலைமையில் சீர்தூக்கும் கோலாக இருத்தலே' என்பதனை விளக்கவே இந்த உவமை கையாளப்பட்டிருக்கிறது. அளக்கப்படும் பொருளும் அளக்கும் அலகும் சமமாக இருந்தாலேயே அளவு துல்லியமாகும். ஆகவே இங்கு எடையள வின் சிறப்புரைக்கப்பட்டுள்ளமை கண்கூடு.

மேலும், கெடும் காலை, அடும் காலை எனுமிரு காலங்களை,

*"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை*
*உள்ளினு முள்ளஞ் சுடும்"* (குறள்,796)

எனக் கூறியிருப்பதன் வாயிலாக அறியலாம். இங்கு, கெடும் காலை என்பதனால் கெடுதி வரும் காலமும், அடும் காலை என்பதனால் காலை நேரப்பொழுதும் சுட்டப்பட்டிருக்கின்றது. காலைப்பொழுது குளிர்ச்சி தரக் கூடியது. கெடுதி நேருங்காலத்தில் கைவிட்டுப் போகிறவர்களின் உறவினை நினைத்தால் குளிர்ந்த காலைப் பொழுதினும் உள்ளம் கொதிக்கும் என்பதே இதனூடாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், 'கொழுநற் தொழு தெழுவாள்' (குறள்,55) என்பதில் பிறதெய்வத்தினைத் தொழாது தன் தெய்வமாகிய கணவனைத் தொழாநின்று துயிலெழுவாள் இயல்பு கூறப்பட்டுள்ளது. மனம் தெளிவடையும் காலம் துயிலெழுங்காலமே. மனம் தெளிதலே தெய்வத்தைத் தொழுவதற்கு அடிப்படையாகும். ஆகவே, நித்திரை விட்டெழும் அதிகாலைப் பொழுதினில் மனம் கலக்க மற்ற தன்மையில் தெளிவடைந்திருக்கும். ஆகையால், 'தொழுதெழுவாள்' (பரிமேலழகர் உரை.1989,90) என்றார். இங்கு ஏனைய பொழுது களைக் காட்டிலும் அதிகாலைப் பொழுதினில் மனம் தெளிந்திருக்கும் என்பதனால் மனத்தின் இயல்பும், அது தெளிவடையுங் காலமும் கூறப் பட்டிருக்கிறது.

### மனித வாழ்வியலில் காலத்தின் பெறுமானமும் - செய்ய வேண்டியனவும்

பொதுவாகத் திருக்குறளில் காலக்கணிப்புப் பற்றிக் கூறப்பட்டவைகள் யாவும் மக்களின் வாழ்வியலை அறம், பொருள், இன்பம் எனும் திரிபதார்த்த நிலையில் ஒழுங்குபடுத்துவதாகவே காணப்படுகின்றன. காலத்துக்கு ஏற்றபடி தனிநபர் அல்லது குடும்ப உறுப்பினர்கள் கடைப்பிடிக்கத்தக்க அறம்சார் கருத்துக்களை திருக்குறளில் பார்க்கக் காணலாம். திருக் குறளின் அதிகார வைப்பொழுங்கானது இவற்றை மென்மேலும் தெளிவு படுத்தும். திருவள்ளுவர் காலத்தின் பெறுமானத்தையும் அந்தந்தக் காலத் தில் செய்ய வேண்டியவற்றையும் வலியுறுத்தியிருப்பதானது வாழ்விய லின் நோக்கம் முழுமையுறல், அறவழியில் உயிர்களை நெறிப்படுத்தல்,

அறம், பொருள்,இன்பம் என்பவற்றை முறைப்படி துய்த்தல் எனும் நோக்கம் கருதியே ஆகும். கல்வி, அரசியல், உணவு, மருந்து, தொழில் முறை மைகள், மக்கட்பேறு, விருந்தோம்புதல், நட்பு உள்ளிட்ட உறவு முறை கள், பொருள், சிற்றின்பம் துய்த்தல் எனும் பண்பாட்டுத் தளங்களினூடாக காலத்தின் பெறுமானம் அழுத்தப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

உள்ளிருந்த அறிவைக் கல்லியெடுப்பதே கல்வியாகும். கல்வியா னது, மனிதனைப் பூரணப்படுத்தும் திறமை வாய்ந்தது.

'அறிவு தொழிலொழுக்கம் ஆண்மை யழகாந்
திறமான கல்வித் திரு'

என்பார் சுத்தானந்த பாரதியார். (சுத்தானந்த பாரதியார், 1947,105) அதாவது பூரணத்துவத்தை அளிக்கவல்ல கல்வியின் உறுப்புக்களாக,

1. அறிவு – தன்னறிவு, நூலறிவு
2. தொழில் - வறுமையற்று வாழ ஒரு நல்ல தொழிற்றிறமை
3. ஒழுக்கம்-அறவியலிலும், நடையியலிலும் காணும் நல்லொ ழுக்கம்
4. ஆண்மை -உடல், மனவுறுதி, ஆட்சித்திறமை, காரியத்திறமை, தைரியம் முதலிய வீரத்தன்மைகள்
5. அழகு - இசை, காவியம், ஓவியம் ஆகிய அழகுக் கலைவளம்.

ஆகியன எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நல்லறிவு, நல்லொழுக்கம், நற் றொழில் வளம், நல்லாற்றல், நற்சுவையின்பம் என்பன கல்வியின் உறுப்புக்களாகும். இவையாவும் பொருந்தி வருகின்ற போதே கல்வி முற்றுப்பெறும்.

திருக்குறள் காட்டும் கல்விச் சிந்தனைகள் ஒவ்வொன்றும் இன்றைய கல்விச் சிந்தனையாளர்களுக்கு முன்னோடி திருவள்ளுவர் என்பதனை மெய்ப்பிக்கும். மணலிலே கேணி தோண்டுவது போல் கல்வியும் அத் துணை எளிமையானது. (குறள்,396) முயற்சி உள்ளவர்களுக்கு மட்டும் அது கிடைக்கும் என்று கல்வியில் ஆர்வமூட்டும் நோக்கில் கூறியிருப்ப தனை அவதானிக்கலாம்.

*"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"* (குறள்,391)

இக்குறளில் கல்விக் காலத்தில் எவ்வாறு கற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், கல்வி நிறைவுற்ற காலத்தில் எவ்வாறு நின்றொழுக வேண்டும் என்பதும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. இங்கு, கசடறக் கற்கும் காலம், கற்றதன் பின் நின்றொழுகும் காலம் என மாணவனின் இருவித கால வொழுங்கு கூறப்பட்டுள்ளது. மேலும் கல்வி கேட்டற் காலம், கசடறச் சிந்திக்கும் காலம், நன்றாகத் தெளியுங் காலம், கற்றதன்படி நின்றொழுகும் காலம் என்பன இக்குறட்பாவில் இழையோடியிருப்பதனையும் உற்று நோக்கலாம்.

மேலும், கல்விக்கு உந்துதலைத் தருவதும் கல்வியின் வாயிலாக இருப்பதும் செவியே என்பதும் திருமூலரின் கருத்தாகும். சிறந்த கேள்வியில் ஈடுபட்டு அதனை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு பசியும் மறந்து போகும் என கேள்விக்கால இன்றியமையாத் தன்மையினை, 'செவிக்கு உணவில்லாத போழ்து' (குறள்,412) என்பதனால் வெளிப் படுத்தியிருக்கிறார். 'உறக்கத்திலும் கற்கலாம்' என்பது இதன்வழி பெறப்படும்.

கணக்கெண்ணுதல் மற்றும் எழுத்தறிதல் ஆகிய இரண்டும் மனிதன் முறையான வாழ்வினை நடத்துவதற்குரிய கண்களாகும்.

*"எண்ணென்ப வேனை யெழுத் தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"* (குறள்,392)

என்பதனால் இதனை அறியலாம். இக்குறளின் மூலம் தமிழரின் எண்ணலளவை தொடர்பான அறிவினை இனங்காண முடிகிறது. தமிழரின் எண்ணலளவை தொடர்பான எண்ணங்களை தொல்காப்பியத் தினின்றும் அறிய முடிகின்ற போதும், முதலில் இவ்வெண்ணங்கள் எவ் வாறு தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என்பதை தமிழர் வரலாற்றி னின்றும் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆயினும் The New Book of

knowledge எனும் நூல் இதன் தோற்றநிலை பற்றிய சில எண்ணங் களைத் தருகிறது. கோடுகள் போட்டு எண்ணிய தன்மை போன்ற பல கருத்துக்கள் இதனால் தெளிவுறுகின்றன. (பகவதி,கு.,2003,7) இவை தமிழர் வரலாறு காட்டும் சில நிலைகளுடன் ஒப்புநோக்கத்தக்கனவாக அமைகின்றன.

சங்ககாலப் பாடல்கள் சில சுவரில் கோடு கிழித்து தலைவன் வரவினை எதிர்பார்க்கும் தலைவியின் நிலையினை சொல்லும் தன்மை யன. கோடுகளை எண்ணி நாட்களை எண்ணும் நிலை இவண் தெரிய வருகின்றது. இன்றும் சில மகளிர் பால் கணக்கு, மோர் கணக்கு எழுதுதல் போன்ற சில நிலைகளில் சுவரில் கோடு கிழித்து இறுதியில் எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காண்கின்றோம். பழமையின் சின்னங்களாகக் கருதத்தக்க இவை மாந்தர் பண்டு தொட்டே எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காட்டவல்லன. (மேலது,8) இன்றைய காலத்தி லும் இதன் தொடருறுத் தன்மையினை பலவாற்றாலும் அறிந்து ணரலாம்.

எனவே கோடு கிழித்து எண்ணும் நிலைக்கு முன்னதாக எண்க ளைப் பற்றிய அறிவினை இவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பது திண் ணம். பல அளவைகளின் பயன்பாட்டுக்கு உதவிய மனித உறுப்புக்கள் ஈண்டும் அவர்களுக்கு எண்ணி அளவிடத் துணையாகின்றன. கை விரல்களை முதலில் ஒவ்வொன்றாக எண்ணி அளவிடத் தொடங்கி பின்னர் ஒன்றுக்குக் குறைவாகவும் பத்துக்கு மேலாகவும் காணத் துவங்குகின்றனர். பொதுவாக உலக மாந்தர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாக இது அமைகின்றது. (மேலது,) இவ்வகையில் எண்ணும் தன்மை இன்றுவரை தொடருறுப் பெற்று வருதலின் வழி, கல்வியில் அதனை, கணக்கெண்ண அறிதல் எனும் பொருளில் "எண் ணென்ப வேனை யெழுத்தென்ப" எனத் திருக்குறளும் வலியுறுத்தியி ருப்பதனைக் கண்டுணரலாம்.

கல்வி கரையில கற்பவர் நாள் சில என நாலடியார் எடுத்தியம்பும். ஆகவே, எத்துணைக் காலம் வரை கல்வி கற்பது? கற்பதற்குக் காலம் உண்டா? என்பதற்கும் வள்ளுவர் விடை பகன்றிருக்கின்றார்.

தொழிற்கல்விக்கு காலம் வரையறுக்க முடியும். ஆனால் மொழி கலை சார்ந்த பாரம்பரியக் கல்வி முறைமைக்கு காலம் வரையறுப்பது கடினமாகும்.

*"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்*
*சார்ந்துணையும் கல்லாத வாறு"* (குறள்,397)

என்பதால் வாழும் கால இறுதிவரை கற்றுக்கொண்டே இருக்கலாம் என கல்வி கற்பதற்கு காலவரையறை இல்லை என்பதனைத் தெளிவுபடுத்து கின்றார். இவ்வாறு தனது ஆயுட்காலம் முழுவதும் நல்லறிவினை நாடி கற்றுக்கொண்டேயிருக்கக்கூடிய ஒருவனுக்கு, அவன் கற்றதனால் பெற்ற நல்லறிவு அவனுக்கு இனிமேல் வரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக அமையும் எனவும் புத்தி புகட்டுகிறார்.

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற்*
*கெழுமையு மேமாப் புடைத்து"* (குறள்,398)

இங்கு எழுமையும் என்பதனால், எழுந்த காலம், எழுகின்ற காலம், எழும் காலம் என திரிகாலம் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம். மானிடப் பிறவி எடுத்த காலத்தில் கற்கும் கல்வியானது ஒருவரது தலைமுறை தோறும் தொடர்ந்து வரும் எனக் கூறியிருத்தலானது, கல்வி கற்பவர்க்கு ஆர்வமூட்டும் (Motivation) செயலாகவும் கல்வியில் உந்தித் தள்ளுகின்ற வழிகாட்டலாகவும் (Guidance) அமைவதனை எண்ணித் துணியலாம்.

மேலும் பழைய வினைகளின் பயன்களை ஊழ் எனும் அதிகாரத் தின் ஊடாக கூறியிருக்கின்றார். முற்பிறப்புக்களின் வழிதொடரும் நல் வினை, தீவினைகளின் பயன் இல்லறம், துறவறம் எனும் இருவழிகளில் கூறப்பட்டிருக்கிறது. பிறவியெடுத்த ஆன்மாக்கள் இல்லறம், துறவறம் என இரு அறவழி தமது இலட்சிய வாழ்வினை நிகழ்த்தும். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' (குறள்,50) எனவும், 'ஆரா இயற்கை அவா நீர்ப்பின் இந்நிலையே பேரா இயற்கை தரும்' (குறள்,370) எனவும் முறையே இல்லற, துறவற நிலையிலுள்ளவர்கள் பிறவித் துன்பத் தளைகளிலிருந்து விடுதலையாகி

பேரின்ப நிலையெய்துவார்கள் என விளக்கப்பட்டுள்ளது. விடுதலையு றாத ஆன்மாக்கள் மீண்டும் பிறவிகளை எடுக்கின்றது என்பதை 'விழிப்பது போலும் பிறப்பு' (குறள்,339) எனக் கூறுவதால் அறியலாம்.

பிறவியெடுக்கும் ஆன்மாக்களின் இன்ப துன்பங்கள் அவை முற்பிறவிகளில் புரிந்த வினைகளுக்குத் தக்கபடி அமையும். முன்செய்த வினைகளின் வசத்தால் செல்வம் அல்லது வறுமை அமையலாம். ஆயினும், செல்வம் வருங்கால் மகிழ்ந்து மயங்கி விடாமலும், வறுமை யுறுங்கால் துன்பப்பட்டு நிலைகுலைந்து போகாமலும் இருக்க வேண்டும் என்பதனை ஊழ் என்னும் அதிகாரத்தினூடாக எடுத்துக் கூறுகிறார். அறத்துப்பாலின் இறுதி அதிகாரம் இதுவாகையால் மறுமைப் பயன்களை நல்ல முறைப்படி அறுவடை செய்ய வேண்டும் என்பதனை அறச்செய் கைகளை முன்னிறுத்தி வலியுறுத்தியுள்ளார். இம்மைக்கால வாழ்விய லில் ஒருவர் செய்யும் செயல்கள் மறுமைப் பிறவிகளையும், பிறவிப்பயன் களையும் தீர்மானிக்கும் என்பதனை கணிப்பிட்டு கூறியுள்ளமை ஈண்டு நோக்குதற்குரியது.

செய்கின்ற செயலொன்றின் வெற்றிக்குக் காலம் அறிந்து செய்வது இன்றியமையாததாகும். திறமை, பொருள் வசதி, பக்கபலம் என அனைத் தும் இருந்தாலும் 'காலம் கருதுதல்' என்பது இருந்தாலேயே குறிக்கோள் வெற்றியுடையதாக அமையும். கருவியாற் காலமறிந்து செயின் (குறள்,483),காலம் கருதி இடத்தாற் செயின் (குறள்,484), காலங்கருதி இருப்பர் (குறள்,485) எனவரும் கருத்துக்கள் ஒருசெயலைச் செய்யு மிடத்து கவனத்திற் கொள்ள வேண்டிய காலம் கணித்துச் செய்தலின் இன்றியமையாமையை வலியுறுத்துவனவே. இங்கு கருவியாற் கால மறிதல் என்பதனூடாக காலத்தோடு செயலைச் செய்து முடிக்க ஏற்ற கருவிகள் எவை? செய்தற்கரிய செயலை எப்போது செய்தல் வேண்டும்? செய்யுங்காலத்தின் அளவு எத்தகையது? என காலத்தின் அவசியம் கூறப்பட்டுள்ளது. காலத்தையும் இடத்தையும் அறிந்து செயலினைச் செய்யுமிடத்து ஞாலங் கருதினும் கைகூடும் என்பதனையே 'காலங் கருதி இடத்தாற் செயின்' எனும் கருத்து தெளிவுபடுத்துகிறது. 'காலங்கருதி

இருப்பர்' என்பதனூடாக செயற்கரும் செய்கைகளைச் செய்யக்கூடி யவர்கள் அதற்கான ஊக்கத்தைக் கொண்டிருப்பவர்கள் தகுந்தவொரு காலத்தை எதிர்பார்த்துக் கலங்காதிருப்பர் எனும் கருத்தினை வெளிப் படுத்தியிருக்கின்றார். இதனால் வாழ்வின் உயரிலக்கினை அடைய விரும்புபவர்கள் காலத்தினை குறிக்கோளாகக் கருதிச் செய்தலின் (காலம் கணித்துச் செயற்படுதல்) இன்றியமையாமையை வலியுறுத்துவன வாகவே இக்கருத்தியல்கள் அமைகின்றன.

மேலும், நாம் ஒரு வேலையைச் செய்வதற்கு ஏவுகின்ற வேலையாள் கூட 'தக்க சமயத்தில் செய்து முடிப்பானா? என்று ஆராய்ந்தே செய்தல் வேண்டும் என்பதனை 'காலத்தோடு எய்த உணர்ந்து செயல்' (குறள்,516) எனும் கருத்தினூடாக விளக்கப்பட்டுள்ளது. மந்திரிகள் எனப்படுவோர் கொண்டிருக்க வேண்டிய முக்கிய தகைமைகளுள் ஒன்றாக, ஒரு காரியத்தைச் செய்வதற்கு, தகுந்த பருவகாலத்தை அறிந்து செயற்படுதல் வேண்டும் (குறள்,631) என்பது கூறப்பட்டுள்ளது. எந்தக்காரியத்தையும் செய்யத் தொடங்கு முன்பு ஆராய்ந்து செயற்பட வேண்டிய ஐந்து அம்சங் களுள் காலமும் ஒன்றென வள்ளுவர் குறிப்பிடுகின்றார். (குறள்,675), காலத்தால் தக்கது அறிதல் (குறள்,686), கடனறிந்து காலங்கருதி இடனறிந்து எண்ணியுரைத்தல் (குறள்,687) என்பதனால் தூதனின் தகுதியை எடுத்துரைக்கின்றார். அதாவது தூதனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் காலமறிந்து செயலாற்றுதல் இன்றியமையாத பண்பாகக் கூறப்பட்டுள்ளது.

உற்றான் அளவும் (நோயுற்றவன் வயது), பிணியளவும் (நோயின் தன்மை), காலமும் (நோயுற்ற காலமும்) (குறள்,949) அறிய வேண்டியது மருத்துவன் கடமையாகும்.

*"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு*
*அருந்தியது அற்றது போற்றி யுணின்"* (குறள்,942)

இக்குறட்பாவினூடாக உயிர் வாழ்க்கைக்கு உணவே மருந்து, மருந்தே உணவு என்பது விளக்கப்பட்டுள்ளது. 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு' என்ற ஒளவையார் சிந்தனையில் உணவின் அளவு கூறப்பட்டுள் ளது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' எனும் பழமொழித்

தொடர் உண்ணும் உணவினது அளவுக்கும் பொருத்தப்பாடாக அமையும். உட்கொண்ட உணவு ஜீரணிக்கும் காலமறிந்து உண்க என்பதனை, ‘அற்றார் அளவறிந்து உண்க’ எனவும், (குறள்,943), தீ அளவு அன்றி (ஜீரணக்காலம்) தெரியாமல் அளவுக்கதிகமாக உண்ணுகின்ற போது நோய் அளவின்றிப்படும் (குறள்,947) எனவும் கூறப்படும் கருத்துக்கள் உணவின் அளவினையும் உயிர் காக்கும் மருந் தாக உணவு அமைவதனையும் விளக்குவனவாக உள்ளன. இன்றைய அறிவியலுலகம் நோய்க்கான பிரதான காரணமாகக் கண்டறிந்து கூறுவது உணவுப்பழக்க வழக்கத்தினையே. இதனால் உணவுக் கட்டுப்பாட்டினை நோய்த்தடுப்புக்கான வழிகளாகப் ‘பரிந்துரை’ செய்வத னையும் ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

## உவமானங்களூடாக காலத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தல்

பொதுவாக உவமைப் பிரயோகத்தில் உவமானத்துக்கான பொரு ளைத் தெரிவதில் செல்வாக்குச் செலுத்தும் இருவிடயங்களை அறியக் கூடியதாக உள்ளது. ஒன்று, யாருக்கு விடயம் சொல்லப்பட வேண்டிய தாக உள்ளதோ அவருக்கு எளிமையாக விளங்கத்தக்க வகையிலான உவமையைப் பிரயோகிப்பது குறித்த படைப்பாளியின் அக்கறை சார்ந்தது. மற்றையது, பொருளை படைப்பின் கவித்துவ-கலைத்துவ வெற்றிக்காக தன்னாற்றல் காட்டி, உவமையாகப் பிரயோகிக்கும் படைப் பாளியின் ஈடுபாடு சார்ந்தது. (பிரசாந்தன்.ஸ்ரீ,2019,30-31)

அனைவருக்கும் விளங்குவதான உவமையைக் கையாள்வதற்கு இயற்கையையும், உலகியலையும் கூர்மையாக அவதானிக்கும் அறிவு இன்றியமையாததாகும். எங்கும் எப்பொழுதும் நடைபெற வல்லவற்றை உவமானமாகக் கூறினாலேயே சாதாரணரும் அவ்வுவமானங்கள் வாயிலாக, படைப்பாளி சொல்ல விளைந்த கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும். எனவேதான், உலகியல்பை உள்ளவாறு அறிந்து கொண்ட வள்ளுவர், பெரும்பாலும் நடைமுறை சார்ந்த காட்சி உவமைகாண் மூலமாக தன் கருத்துக்களை எடுத்துரைக்கின்றார். (மேலது,31)

தொழில், பயன், வடிவு, நிறம் அல்லது வண்ணம் இந்நான்கினுள் ஒப்புமைக்கு எடுத்துக் கொண்ட பொருள் உவமப் பொருளாகும். புலியன்ன மறவன், மாரியன்ன வண்கை, துடியிடை, பொன்மேனி என்பன முறையே அவற்றுக்கு உதாரணங்களாகும். இவைகள் கலந்து வருவது மியல்பே. உவமப் பொருள் உவமிக்கப்படும் பொருளினும் உயர்ந்த தன்மைத்தாயிருத்தல் வேண்டும். சிறப்பு, அழகு, காதல், வலி என்ற நான்கினடியாக உவமை பிறக்கும். இழிவு காரணமாகவும் உவமை பிறப்பதுண்டு. (கா.சுப்பிரமணியபிள்ளை,கா.,2007,130) உயர் திணைக்கு அஃறிணையும், அஃறிணைக்கு உயர்திணையும் உவமமாதலுண்டு. ஒப்பு இன்ன வகைத்தென்று கூறாமலும் உவமம் வரும். அதனைப் பொருந்து முறையால் ஒப்புக்கொள்ள வேண்டும். உவமையும் பொருளும் ஒத்திருத்தல் வேண்டும்.

இருவரி அமைப்புடைய செய்யுளில் தான் கூறப்புகுந்த அல்லது பிறருக்கு அறிவுறுத்தவல்ல கருத்துக்களை எளிமையாகவும், தெளிவாகவும் விளக்குவதென்பது இலக்கிய கர்த்தாவின் அசாத்திய ஆற்றலே. அறம், பொருள், இன்பம் என்ற நிலையில் சாதாரண மக்களுக்கு வாழ்வியல் இலக்கினை கூறவிளைந்த வள்ளுவர் உவமையின் அவசியத்தினை உணர்ந்திருக்கிறார். இக்கருத்துக்களை விளக்குவதற்கு அப்பால் மறை பொருளாக, காலம் என்பதன் அவசியம், காலத்தின் விரைந்தழியும் தன்மை, குறித்த காலத்தில் செய்யத் தக்கவைகள், அக்காலத்தில் செய்யும் செயல்களின் பயன்படுநிலை என்பவற்றினை விளக்கியுள்ளமையும் எம்கவனத்தைப் பெறுகின்றது. கருத்தியல்களுடன் காலத்தையும் விளக்கியிருத்தல் அவரது படைப்பாற்றல் திறனேயாகும். போகத்தினை காலவரையறைக்கு உட்படுத்துவது காலம் எனும் தத்துவமாகையால், ஆன்ம போக நுகர்ச்சியின் அவ்வக் காலங்களில் நிகழ்த்திவிட வேண்டும் என்று அறிவுறுத்துவதாகவே அவரது கருத்தியல் வெளிப்பாடுகள் அமைகின்றன.

அறம், பொருள், இன்பம் எனும் முப்பானூற் சுருக்கத்தில் அவர் கூறும் உவமைகள் காலம் பற்றிய அறிதலுக்குத் துணைபுரியக் கூடியன. சீருடைச் செல்வரின் இயல்பினை விளக்குவதற்கு 'சிறுதுளி மாரி

அறங்கூர்ந்தனைய' வென மாரியை உவமையாக்குகிறார். (குறள்,1010) வறிய நிலையிலிருப்பார்க்கு கொடுத்துதவாதவர்களின் செல்வத்தின் இயல்பினை அழகுடைய பெண் தனியாகவே இருந்து கிழவியாவதை ஒக்கும் எனும் உவமையால் விளக்கியிருக்கிறார். (குறள்,1007) ஊக்கமுடையவன் தக்க காலம் வரும்வரை அடங்கியிருப்பதானது, 'சண்டையிடுகிற ஆட்டுக்கடா தாக்குதவற்காகப் பின்னால் செல்வதனை ஒக்கும்' என உவமை கூறுகிறார். (குறள்,486) தக்க காலம் வாய்க்கும் போது விரைந்து செயற்பட்டு காரியத்தை முடித்துவிட வேண்டும் எனும் கருத்தினை, 'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குந்தொக்க' எனும் உவமை கொண்டு விளக்கியுள்ளார். பெண்கள் எவ்வளவு தான் காம வேதனையுடன் இருப்பினும் மடலேறும் காரியத்தினைச் செய்வ தில்லை. பெண்களின் இயல்பினைக் காட்டினும் பெருமையடையத்தக்க குணம் வேறில்லை என்பதனை 'கடல் அன்ன காமம்" (குறள்,1137), "கடலாற்றாக் காமநோய்" (குறள்,1175) எனும் உவமையாலும், உட்பகை என்பது எள்ளினைப் போன்று அளவில் மிகச்சிறியதாயினும் கேடு விளை விக்கக் கூடியதே என்பதனை,'எட்பகவு அன்ன சிறுமை' (குறள்,889), எனவும், அரசற்குத் தம் எதிரிகளை வெல்வதற்குத் தக்ககாலம் வேண் டும் என்பதனை, 'பகல்வெல்லும் கூகையை காக்கையிகல் வெல்லும்' எனவும் உவமை கொண்டு விளக்கியிருக்கின்றார்.

**நிறைவுரை:**

தமிழ் இலக்கியங்களிலுள்ள ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்கள் யாவும் அறிவைத்தூண்டி விளக்கமுறச் செய்வனவாகக் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களில் அறிவியல் இரண்டறக் கலந்திருப்பதனை மிகத் தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடர்ச் சியில் திருக்குறளுக்குத் தனித்துவமான இடமுண்டு. தமிழரின் அறி வியல் சிந்தனைகளின் பாய்ச்சல்களை இந்நூலில் தெளிவாகக் கண்டு ணரலாம். அனைத்திற்கும் காலமே அடிப்படை. மாந்தரின் வாழும் காலத்தின் இடைவெளிக்குள் அறம், பொருள், இன்பம் எனும் அடிப்படைப் பொருட்கள் சார்ந்த ஒழுங்கினை மையப்படுத்தி வாழ்வியலைக் கட்டமைக்க எத்தனித்தமையின் அடிப்படையில் திருக்குறளில் காலக் கணிப்பீடுசார் சிந்தனைகள் அணுகப்பட்டிருக்கின்றது. காலக்

கணிப்பீட்டில் அளவைகள் தொடர்பான அறிவினைப் பெறுவதும் தவிர்க்க வியலாதது எனும் அடிப்படையில் அளவைகள், காலக்கணிப்புகள், மனித வாழ்வியலில் காலத்தின் பெறுமானம் மற்றும் அதனையுணர்ந்து செய்ய வேண்டியன எனும் வகையில் வள்ளுவர் காலக் கணிப்புத் தொடர்பான கருத்துக்களை முன்வைத்துள்ளமை இதனாற் றெளியப்படும்..

## உசாத்துணை நூல்கள்


1. சுப்பிரமணியபிள்ளை,கா., (2007), பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, பாரி நிலையம், சென்னை.
2. பகவதி,கு., (2003), தமிழர் அளவைகள், உலகத் தமிழாராச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
3. தெட்சணாமூர்த்தி, அ., (2011), தமிழர் நாகரிகமும் பண்பாடும், சென்னை.
4. தணிகாசலம், கதிர்., (1997), தமிழ் மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும், சரவணா பதிப்பகம், சென்னை.
5. திருக்குறள் பரிமேலழகர் உரை, (1989), நான்காம் பதிப்பு, பாரதி பதிப்பகம், சென்னை.
6. வரதராஜன், ஜி., (உ.ஆ.), (1954), திருக்குறள் உரை விளக்கம், திருச்சிராப்பள்ளி யுனைட்டட் பிரிண்டேர்ஸ் லிமிடெட், திருச்சி.
7. கணேசலிங்கம், க., (2001), வள்ளுவம் வழங்கும் தமிழர் தத்துவம், பீச்ஹோம் அவென்யு, பெசன்ட் நகர் சென்னை.
8. பிரசாந்தன்.ஸ்ரீ., (2019), "திருக்குறளில் உவமை - காமத்துப்பாலை அடிப் படையாகக் கொண்ட ஆய்வு", திருக்குறள் ஆய்வுக்கட்டுரைகள், பண்பாட்ட லுவல்கள் திணைக்களம், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.
9. சுப்ரமண்யன், என்., (உ.ஆ.), (2004), இரண்டாம் பதிப்பு, பிற்கால நீதி நூல்கள், லிட்டில் ப்ளவர் கம்பனி, சென்னை.
10. திருநாவுக்கரசு, க.த., 1977, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
11. பலியூர்க்கேசிகன், (ப.ஆ.), (2016), திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
12. இளையதம்பி, மு., (1986), இரண்டாம் பதிப்பு, முப்பொருள் உண்மை விளக்கம், ஈகிள் பிறிண்டிங் வேக்ஸ் லிமிட்டெட், 161 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.